யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | பொருளியல் |
|---|---|---|

## பொருளியல் – I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 11) | 2 | 21) | 5 | 31) | 2 | 41) | 5 |
| 2) | 5 | 12) | 2 | 22) | 4 | 32) | 1 | 42) | 1 |
| 3) | 2 | 13) | 2 | 23) | 4 | 33) | 3 | 43) | 5 |
| 4) | 3 | 14) | 4 | 24) | 3 | 34) | 2 | 44) | 1 |
| 5) | 2 | 15) | 1 | 25) | 4 | 35) | 1 | 45) | 4 |
| 6) | 3 | 16) | 3 | 26) | 1 | 36) | 4 | 46) | 2 |
| 7) | 1 | 17) | 3 | 27) | 4 | 37) | 5 | 47) | 1 |
| 8) | 2 | 18) | 2 | 28) | 1 | 38) | 2 | 48) | 2 |
| 9) | 4 | 19) | 5 | 29) | 3 | 39) | 5 | 49) | 1 |
| 10) | 2 | 20) | 2 | 30) | 4 | 40) | 2 | 50) | 2 |

## பொருளியல் – II

01. I. என்ன பொருளை எந்தளவு உற்பத்தி செய்தல் (1 புள்ளி)
எப்படி உற்பத்தி செய்தல் (1 புள்ளி)
யாருக்கு உற்பத்தி செய்தல் (1 புள்ளி)

II. சந்தைப் பொருளாதாரத்தில் விலைப் பொறிமுறை மூலமும் கட்டளைப் பொருளாதாரத்தில் மத்திய திட்டமிடற்குழு மூலமும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தொடர்பான தீர்வு காணப்படுகின்றது. (1 புள்ளி)

♠ **என்ன பொருளை உற்பத்தி செய்தல் என்பது**

சந்தைப் பொருளாதாரத்தில் பொருட்சந்தையில் விலைமுறைமை மூலம் தீர்மானிக்கப்படும் உற்பத்தியாளர் விலை சமிக்ஞைகளைப் பயன்படுத்தி சார்பு ரீதியில் அதிக லாபம் தரக்கூடிய பொருட்களையும், நுகர்வோரும் விலை சமிக்ஞைகள் மூலம் மிகச் சிறந்த பெறுமதி கொண்ட பொருட்களையும் தெரிவு செய்வர்.

கட்டளைப் பொருளாதாரத்தில் மத்திய திட்மிடற் குழுவினால் என்ன பொருளை எந்தளவு உற்பத்தி செய்வது என்பது தீர்மானிக்கப்படுகின்றது. (1 புள்ளி)

♠ **எப்படி உற்பத்தி செய்தல் என்பது**

சந்தைப் பொருளாதாரத்தில் காரணிச்சந்தையில் விலைப் பொறிமுறை மூலம் உற்பத்தி செலவு குறைந்த உற்பத்தி தொழில்நுட்ப முறையினை தெரிவு செய்வர். (3 புள்ளி)

கட்டளைப் பொருளாதாரத்தில் மத்திய திட்டமிடற் குழுவின் தீர்மானங்கள்/ கட்டளைகள் மூலம் உற்பத்தித் தொழில்நுட்ப முறை தீர்மானிக்கப்படுகின்றது.

(1 புள்ளி)

♠ **யாருக்காக உற்பத்தி செய்தல் என்பது**

சந்தைப் பொருளாதாரத்தில் தனிநபர் வருமானங்கள் காரணிச்சந்தையில் காரணிகளுக்குக் கிடைக்கும் விலை மற்றும் அவ்விலையில் பரிமாற்றப்படும் காரணி அளவுஎன்பவற்றினால் தீர்மானிக்கப்படுகின்றன.

கட்டளைப் பொருளாதார மொன்றில் தனிப்பட்டவர் வருமானங்கள்/காரணி விலைகள் மத்திய திட்டமிடற் குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றன. (1 புள்ளி)

III. வீட்டுத்துறை

நிறுவனத்துறை

(வியாபார நிறுவனங்கள்)

அரசாங்கத்துறையினர் (அரசாங்கம்) (3 புள்ளி)

IV. தேவைகள் (**Needs**)

மனிதனென்ற வகையில் உயிர் வாழ்தற் பொருட்டு நபர் ஒருவருக்குத் தேவைப்படும் அதிகுறைந்த வாழ்க்கை வசதிகள் தேவைகள் ஆகும். வாழ்வதற்காக நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டிய தேவைகள் மிகச்சிலவாகும். (1புள்ளி)

உ+ம் -

♠ உணவு, நீர், உடை, உறையுள் போன்ற பௌதீக ரீதியான தேவைகளும் பாதுகாப்பு, மதிப்பு, கௌரவம், சுயமரியாதை போன்ற சமூகத்தேவைகளும் உளத்தேவைகளும் உள்ளன.

♠ மனித தேவைகள் வரையறுக்கப்பட்டவையாகும். (1 புள்ளி)

விருப்பங்கள் (**wents**)

மனித தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் திருப்தியை அதிகரித்துக் கொள்வதற்கும் மனிதனால் தெரிவு செய்யப்படும் பல்வேறு விதங்கள் வடிவங்கள் முறைகள் விருப்பங்களாகும். (1 புள்ளி)

உ +ம் -

♠ ஆடை தேவையாக உள்ளபோது ரீசேட், சேலைகள், கவுன்கள், விருப்பங்களாகும்


♠ விருப்பங்கள் வரையறுக்கப்பட்டாதவை/ ஏராளமானவை

V. குறைந்தளவான உள்ளீட்டைப் பயன்படுத்தி உச்ச வெளியீட்டைப் பெறுதல்/குறிப்பிட்ட அளவு உற்பத்தியை மிகக்குறைந்த செலவில் மேற்கொள்ளுதல் என்பது உற்பத்தி வினைத்திறன் என்பதால் காட்டப்படுகின்றது.

உற்பத்தி வினைத்திறன் தொடர்பில் பின்வரும் இரு நிபந்தனைகள் ப'ர்த்தியாக்கப்படல் வேண்டும்

- பு'ரண வேலை வாய்ப்பினை அடைதல் (full employment)

- ப˙ரண உற்பத்தியை ஏற்படுத்துதல் (full production) (2 புள்ளி)




விவசாய உற்பத்தி (1 புள்ளி)

உற்பத்தி சாத்திய வளை கோட்டில் உள்ள சகல புள்ளிகளும் உற்பத்தி வினைத்திறனைக் குறித்து நிற்கின்றது. (1 புள்ளி)


VI. யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படத் தயாராகவுள்ள ஊழிய மணித்தியாலய அளவு (1 புள்ளி)

சனத்தொகையில் ஊழியத்தை நிரம்பல் செய்யத்தயாராகவுள்ள சதவீதம் மற்றும் ஊழியர் வேலை செய்வதற்கு ஆயத்தமாகவுள்ள சராசரிக்காலம் என்பன ஊழிய நிரம்பலில் செல்வாக்குச் செலுத்தகின்றன. (1 புள்ளி)

02. i. குறிப்பிட்ட பொருளின் விலை
தொடர்புடைய பண்டங்களின் விலைகள்
நுகர்வோர் வருமானம்
நுகர்வோன் சுவை
நுகர்வோர் எண்ணிக்கை
நுகர்வோர் எதிர்பார்க்கைகள்

ii. சந்தையின் பொருளின் விலை உயரும் போது இலாபம் அதிகரித்தல்(2 புள்ளி)
உற்பத்தி நிரம்பல் அதிகரிக்கும் போது அதன் எல்லைக்கிரயம் அதிகரிக்கின்றது அதிகரிக்கும் எல்லைக்கிரயத்தை ஈடுசெய்யக்கூடிய வகையில் பொருளின் விலை அதிகரிப்பதால் விலை உயர நிரம்பலாளர் நிரம்பல் அளவினை அதிகரிப்பர்
(2 புள்ளி)

iii. வழங்கத்தயாராக உள்ள விலைக்கும் நுகர்வோன் வழங்கிய விலைக்கும் இடையிலான வேறுபாடு நுகர்வோர் மிகையாகும்
பொருளை விற்பனை செய்யத்தயாரான விலைக்கும் உற்பத்தியாளர் சந்தையில் பொருளை விற்பனை செய்த விலைக்கும் இடையிலான வேறுபாடு



iv. அ. சமநிலை விலை 40 ரூபா
சமநிலைத் தொகை 200 அலகுகள் (2புள்ளி)

ஆ. நுகர்வோன் செலுத்தும் விலை 35 ரூபா
உற்பத்தியாளருக்கு கிடைக்கும் விலை 45 ரூபா (4 புள்ளி)

இ. மானியத்தின பின் நுகர்வோர் மிகை 3125 ரூபா (2 புள்ளி)

03. I) குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றினால் சந்தையின் விலையில் செல்வாக்குச் செலுத்த முடியாதிருப்பதுடன் நிலவும் விலைகளில் அந்நிறுவனம் விற்பனையை மேற்கொள்ளுமாயின் அந்நிறுவனம் விலையை ஏற்போன் ஆகும்

நிறைபோட்டிச்சந்தையில் நிறுவனங்கள் விலையை ஏற்போனாகத் தொழிற்படுகின்றன.

நிறைபோட்டிச்சந்தையில் ஒரு நிறுவனம் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருள் ஓரினத்தன்மை வாய்ந்ததாகவும் நிரம்பல் செய்யப்படும் அளவு மிகச்சிறிய அளவாகவும் காணப்படுவதனால் சந்தை விலையில் செல்வாக்குச் செலுத்த முடியாது (2 புள்ளி)

நிறைபோட்டிச் சந்தை யொன்றில் கொள்வனவாளர்களுக்கு சந்தை பற்றிய பூரண தகவல்கள் கிடைப்பதனால் நிறுவனங்கள்வெவ்வேறு விலைகளை அறவிட முடியாது (2 புள்ளி)

II) தொழினுட்ப ரீதியான சிக்கனங்கள்
முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சிக்கனங்கள்
சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய சிக்கனங்கள்
நிதிசார் அளவுத்திட்ட சிக்கனங்கள்
இடரபாயம் சார்ந்த அளவுத்திட்ட சிக்கனங்கள்
ஆளணி/ஊழியம் தொடர்பான சிக்கனங்கள்

(தலா 1 புள்ளி வீதம் 4 புள்ளி)

III) குறிப்பிட்ட தொழிலிலுள்ள உற்பத்தி நிறுவனமொன்று இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான நிறவனங்கள் நிரம்பல் செய்யும் விலையை விடக் குறைவான விலையில் முழுச்சந்தைக்கும் தேவையான நிரம்பலை மேற்கொள்ள முடியுமாயின் அந்நிறுவனம் ஒரு இயற்கைத் தனியுரிமையாக மாறும் (2 புள்ளி)

இந்நிறுவனம் கூடிச்செல்லும் அளவுத்திட்ட விளைவினைப் பெற்றிருப்பதனால் உற்பத்தி அதிகரிக்கும் போது நீண்டகால சராசரிச் செலவு வீழ்ச்சியடையும். அதனால் போட்டி நிறுவனங்களால் இச்சந்தையில் நிலைந்திருக்க முடியாது போகும். இது இயற்கையாகவே குறித்த நிறவனம் தனியுரிமையாக மாறும் (2 புள்ளி)

IV. நிறுவனத்தின் கேள்வி வளையி மேலிருந்து கீழ்நோக்கிச் சரியும்
நிறுவனம் விலையை நிர்ணயிப் போனாவான் (4 புள்ளி)

V. அ. ரூபா 15 ஆகும் - (2 புள்ளி)

ஆ. ரூபா 16000 ஆகும் - (2 புள்ளி)

04) I)

- தேறிய வட்டி
- இலாபங்கள் பங்கு லாபங்கள்
- சம்பளங்களும் கூலிகளும்
- வாடகை
- சுயதொழில் வருமானங்கள்
- உயர் தொழில் வருமானங்கள்
- மூலதன நுகர்சி (4 புள்ளி)

II) சூழல் மாசடைதல் தொடர்பான விடயங்கள் கருத்தல் கொள்ளப்படுவதில்லை

- பொருளாதாரத்தில் இல்லத்தரசிகளது பயனுடைய செயற்பாடுகள் கருத்தில் கொள்ளப்படாமை
- சந்தைப்படுத்தப்படாத பொருளாதார நடவடிக்கைகள் கருத்தில் கொள்ளப் படாமை
- முறைசாரா பொருளாதார நடவடிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாமை

(ஏதாவது 3 ற்கு 3 புள்ளி)

III) GDP = C +I+ G+ NX

தனியார் நுகர்வு, அரசாங்கக் கொள்வனவு, முதலீடு தேறிய ஏற்றுமதி என்பவற்றைக் கூட்டுவதன் மூலம் அளவிடலாம். (4 புள்ளி)

IV) அ) பெறுமானத்தேய்வு = மொத்த முதலீடு – தேறிய முதலீடு

= 1000 – 600

= 400

தேறிய உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி – பெ.தே

= 8000 – 400

= 7600 (2 புள்ளி)

ஆ) தேறிய ஏற்றமதி = மொத்த உள்நாட்டு உற்பத்தி – உள்நாட்டுச் செலவு

= 8000 – (1000 + 4500 + 1200)

= 8000 + 6700

= 1300 (2 புள்ளி)

இ) வரவு செலவுத்திட்ட மிகை = தேறியவரி – அரசாங்கக் கொள்வனவு

100 = தேறிய வரி – 1200

100+1200 = தேறியவரி


; தேறிய வரி = 1300 (2 புள்ளி)

ஈ. செலவிடத்தக்க தனியார் வருமானம் = தேறிய தேசிய உற்பத்தி – வரிகள்

= 7600 – 1300

= 6300 (2 புள்ளி)

05) I.




II. எல்லை நுகர்வு நாட்டம் (mpc) அதிகரிக்கும் போது பெருக்கி அதிகரிக்கின்றது. mpc குறையும் போது பெருக்கியும் குறைகின்றது. எனவே நேர்க்கணிய தொடர்பு நிலவுகின்றது. (3 புள்ளி)

III. மொத்தக்கேள்வியின் கூறுகள்

AD =C + I + G + (X – m)

நுகர்வு, முதலீடு, அரசாங்கக் கொள்வனவு, தேறிய ஏற்றுமதி என்பவற்றை விளக்குதல் வேண்டும் (4 புள்ளி)

IV) அ.

| வருமானம் | நுகர்ச்சி |
|---|---|
| 5000 | 4250 |
| 10000 | 8000 |

MPC + $\frac{\Delta C}{\Delta Y} = \frac{3750}{5000} = 0.75$ (2 புள்ளி)

ஆ. C = 500 + 0.75 y

I = 200 , G = 200 எனின்

சமநிலை வருமான மட்டம் ரூபா 3600 ஆகும். (3 புள்ளி)

இ. அரசாங்க செலவீட்டுப் பெருக்கி = 4

வரிப்பெருக்கி = -3 (2 புள்ளி)

ஈ. அரசாங்கச் செலவினை 250 மில்லியனால் அதிகரித்தல் வேண்டும்.

வரியினை 333.3 மில்லியனால் குறைத்தல் வேண்டும். (3 புள்ளி)

06. I) பொதுமக்கள் பணத்தை வருமானம் பெறும் வேறு சொத்துக்களில் முதலிடுவார்களாயின் வாடகை வட்டி இலாபம் போன்ற வருமானங்களை உழைக்கமுடியும். (1 புள்ளி)

பணத்தைப் பணமாகத் திரட்டி வைப்பதனால் அத்தகைய வட்டி இலாபம் போன்ற வருமானத்தை இழத்தல் பணத்தைத் திரட்டி வைப்பதன் அமையச் செலவாகும்.

(1 புள்ளி)

The national e-learning Portal for The General Education

II) நாட்டில் பலவணிக வங்கிகள் உள்ள நிலையில் ஒரு வணிக வங்கியின் பணவாக்க ஆற்றல் குறைவாகும்.
குறிப்பிட்ட வீதத்தினை ஒதுக்காகக் கொண்டிருத்தல்
ஆரம்ப வங்கி தம்மிடம் வருகின்ற வைப்புக்களில் ஒதுக்கு போக எஞ்சிய மிகை ஒதுக்கினை கடனாக வழங்குகின்றன.
காசு வெளியேற்றம் இல்லை
மத்தியவங்கி கடன் க்டுப்பாடு எதனையும் மேற்கொள்ளவில்லை (4 புள்ளி)

III) மத்திய வங்கியின் தேறிய உள் நாட்டுச்சொத்து
a. அரசுக்கு வழங்கிய தேறிய கடன்
b. வணிக வங்கிகளுக்கு தேறிய கடன்
மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்து
மத்திய வங்கியின் தேறிய ஏனைய சொத்து (4 புள்ளி)

IV. அ) $M_1 = 1200$
$H = 200+200 = 400$
$K = \frac{1200}{400} = 3$ (2 புள்ளி)

ஆ) $M = k \times H$
$\Delta m = K \times \Delta H$
$300 = 3 \times \Delta H$
$\Delta H = \frac{300}{3}$
$\Delta H = 100$ ஆகவே அரசுக்கு வழங்கிய கடன் 100 மில்லியனால் அதிகரித்துள்ளது. (3 புள்ளி)

V) அ) உண்மை ஒதுக்கு – ஒதுக்க வேண்டியது = மிகை ஒதுக்கு
$400 - (2000 \times \frac{8}{100})\ 160 = 240$
எனவே வங்கி வழங்கக்கூடிய உச்சகடன் அளவு 1840 மில்லியனாகும்.
(2 புள்ளி)

ஆ) மத்தியவங்கி திறந்த சந்தையில் ஆவணங்கள் பிணைகளை கொள்வனவு செய்யும் போது வங்கிகளின் திரவத்தன்மை அதிகரிக்கும் கடனாக்கம் அதிகரித்து பணநிரம்பல் விரிவாக்கமடையும். (3 புள்ளி)

07) I) அ) தேசிய எல்லை கடந்து பிராந்திய மக்கள் அனைவராலும் கூட்டாக நுகரக்கூடியதும், விலக்குதல் விதிக்கு உட்படாததுமான பண்டம் பிராந்திய பொதுப் பொருளாகும்.
உதாரணம் - பிராந்திய சுனாமி எச்சரிக்கை மையம் (2 புள்ளி)

ஆ) போட்டித்தன்மை உடையதும் விலக்குதல் விதிக்கு உட்படாதுமான வளங்கள் பொதுவளங்கள் ஆகும்.

உதாரணம் - கடல்வளம், வளவளம், மேச்சல் நிலம் (2 புள்ளி)

II) வருமான வரி 17%

பெறுமதி சேர்வரி 23%

கலால் வரி 21%

இறக்குமதி வரி 7%

ஏனைய வரிகள் 20% (5 புள்ளி)

III) பொதுப்பண்டங்கள் சேவைகளை வழங்குதல்


வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்துதல்

பொருளாதார உறுதிநிலை பேணல்

கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்தல்

சட்டத்தினையும் ஒழுங்கினையும் நிலைநாட்டல் (5 புள்ளி)

IV)




சந்தை முறை தனியார் செலவு தனியார் நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு வெளியீட்டை மேற்கொள்கின்றது வெளிவாரி செலவு உள்ள நிலையில் சந்தை முறைமை மிகை உற்பத்தி மிகைவளப் பயன்பாடு என்பவற்றைக் கொண்டிருப்பதால் சந்தை முறை வளர்பகிர்வும் செயற்றிறன் கொண்டிருப்பதில்லை. வளப்பகிர்வுச் செயற்றின் கொண்ட வெளியீட்டு மட்டமாகும். (2 புள்ளி)


V) மீள் சுழற்சி முறை


வரிகளை விதித்தல்

நல்வழி ஆலோசனை

(2 புள்ளி)

08. அ) அமெரிக்கா கனடா




(4 புள்ளி)

ஆ) அமெரிக்காவின் உற்பத்திப்புள்ளி A

கனடாவின் உற்பத்திப்புள்ளி B (2 புள்ளி)

இ) மேலே வரைபில் காட்டப்பட்டுள்ளது. (2 புள்ளி)

II.
1. தேசியப்பாதுகாப்பு நோக்கம்
2. உள் நாட்டு கூலியினை பாதுகாத்தல்
3. வேலைவாய்ப்பினை பாதுகாக்க
4. வளர்ந்து வரும் கைத்தொழில்களைப் பாதுகாக்க
5. சென்மதி நிலுவையினைப் பாதுகாக்க
6. குவித்தலைத் தடுத்தல்

III. நாணய அதிகாரிகளது எவ்வித கட்டுப்பாடுமின்றி தன்னிச்சையாக நாணங்களின் கேளிவி நிரம்பல் சக்திகளினால் நிர்ணயிக்கப்படும் நாணய மாற்று வீதம் மிதக்கும் நாணயமாற்று வீதமாகும்.

(2 புள்ளி)

மிதக்கும் நணய மாற்றுவீதம் ஒன்றில் நாணய அதிகாரிகள் தலையீட்டு நாணயமாற்றுவீத்தில் ஏற்படும் பெறுமதி தேய்வடைதலையும், பெறுமதி உயர்வடைதலையும் தவிர்ப்பதற்காக நாணயங்களைக் கொள்வனவு செய்தல், விறபனவு செய்தல், என்பவற்றில் ஈடுபடுவதன் மூலம் நாணயமாற்று வீதத்தில் தளம்பலைக்கட்டுப்படுத்துதல் முகாமை செய்யப்பட்ட நாணயமாற்று வீதமாகும்.

(2 புள்ளி)

IV)

| **விடயம்** | **1977** | **2014** |
|---|---|---|
| விவசாய ஏற்றமதிகள் | 79 | 25.2 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | 14 | 74.2 |
| களிப்பொருள் ஏற்றுமதிகள் | 07 | 0.5 |
| ஏனைய ஏற்றுமதிகள் | - | 0.1 |

100 100 (4 புள்ளி)

09.

i. ஒரு நாட்டின் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மெய் மொத்த தேசிய உற்பத்தி நீண்ட காலத்தின் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லுதல் பொருளாதார வளர்ச்சியாகும். பண்டங்கள் சேவைகளின் தொகை ரீதியான அதிகரிப்பினை இது குறிக்கும்.
ஒருநாட்டின் மெய் தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பின் நூற்று வீதம் பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகும். (4 புள்ளி)

ii. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் 1999 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு வயது வந்தோர் எழுத்தறிவு வீதம் மற்றும் பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் வீதம் தனி நபர் வருமானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. இலங்கை 2014 இல் 0.750 ஆகவும் 182 நாடுகளில் 73 வது நிலையினைக் கொண்டு உள்ளது (4 புள்ளி)

iii.
- வேலைவாய்ப்பு அதிகரித்தல்
- வறுமை குறைதல், வாழ்க்கைத்தரம் அதிகரித்தல்
- பொதுப்பொருட்களையும் சமூகநலப் பொருட்களையும் வழங்கக்கூடிய அரசின் ஆற்றல் அதிகரித்தல்
- அரச வருமானம் அதிகரிக்கும் சென்மதி நிலுவை முன்னேற்றமடையும்
- விலை உறுதிப்பாடு ஏற்படுத்தல் (ஏதாவது 4ற்கு 4 புள்ளி)

iv.
- நீதியான வருமானப் பங்கீடு
- சமமான பிராந்திய வளர்ச்சி
- சமூக பொருளாதார உட்கட்டமைப்பு விருத்தியடைதல்
- விவசாய உற்பத்திதிறன் அதிகரித்தல்
- வேலை வாய்ப்பு அதிகரிக்கப்படல்
- சுற்றாடல் பாதுகாப்பு
  நல்லாட்சி ஏதாவது 4ற்கு 4 புள்ளி)

v.
- அதிகரித்த அரச கடன் சுமை
- மந்தகரமான அரச வருவாய் வளர்ச்சி
- பாதீட்டில் உயர் பற்றாக்குறை
- சென்மதி நிலுவைப்பிரச்சனை
- குறைவான உள்நர்டு சேமிப்பு
- வினைத்திறனற்ற அரச நிர்வாகம் (4 புள்ளி)

10)

I. மிகக்குறைந்த கலோரிப் பெறுமானத்தை பெற்றுத்தருகின்ற உணவுப்பொருட்களை உள்ளக்கிய அடிப்படைத்தேவைகளைப் பெறுவதற்கு தேவையான வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்ள முடியாத நிலை முழு வறுமையாகும் - வறுமைக்கோட்டின் அடிப்படையில் அளவிடப்படும். 2 புள்ளி)
வருமானப்பகிர்வின் ஏற்றத்தாழ்வு காரணமாக சார்பு வறுமை ஏற்படுகின்றது. உயர்ந்த வருமானத்தினருடன் ஒப்பிடும் போது குறைந்த வருமானத்தினர் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வருமானங்களை அடைய முடியாத நிலை சார்பு வறுமையாகும்.(2 புள்ளி)

II.
1. வறிய சமூகத்திற்கு சாதகமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல்
2. வறிய சமூகத்தினரை சக்தி வாய்ந்தவர் ஆக்குதல்
3. வறிய மக்கள் நோக்கி வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல்
4. வறிய மக்கள் நோக்கி மாற்றல்களை அதிகரித்தல்
5. வறிய மக்கள் நோக்கி ஏனைய சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

(4 புள்ளி)

III. நாடொன்றின் பொருளாதார, சமூக சுற்றாடல் துறைகளுக்கிடையில் சமநிலையான விருத்தி நிலை பேறான பொருளாதார அபிவிருத்தி ஆகும். எதிர்கால பரம்பரையினர் தமது தேவையினை ப'ர்த்தி செய்து கொள்ள உள்ள ஆற்றலுக்கு தீங்கு ஏற்படாவண்ணம் நிகழ்கால பரம்பரையினர் தமது தேவைகளை ப'ர்த்தி செய்து கொள்கின்ற அபிவிருத்தி இதுவாகும். இது பின்வரும் மூன்று முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாகும்.
1. பொருளாதார விருத்தி
2. சமூக விருத்தி
3. சுற்றாடல் பாதுகாப்பு (5 புள்ளி)

IV.
1. குறைந்த பிறப்பு வீதம் குறைந்த இறப்பு வீதம் கொண்ட விரும்பத்தக்க சனத்தொகை வளர்ச்சி ஏற்படுதல்
2. முதியோர் தொகை அதிகரித்தலும் சிறுவர் அளவு குறைதலும்
3. ஊழிய வயதுப்பிரிவினர் குறைவடைதல்
4. பெண்களின் ஆயள் அதிகரிப்பு மற்றும் முதியவிதவையின் அளவு அதிகரித்தல்

(4 புள்ளி)

V. நாட்டின் ஊழியப்படையினரை 15 வயதும் அதற்கு மேற்பட்டதுமான ஊழிய வயதுச் சனத்தொகையின் நூற்றுவீதமாகக் கூறுதல் ஊழியப்படை பங்குகொள்ளல் வீதமாகும்.
ஊழியப்படை பங்குகொள்ளல்வீதம் = ஊழியப்படை ÷ 15 வயதும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையும் ×100 (3 புள்ளி)